செ.வெ.எண்: 17 நாள்: 09.08.2021

**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம்**

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் பிரதம மந்திரியின் உணவுப் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபடுகின்ற உள்ள சிறு / குறு நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம்**

பிரதமரின் உணவுப் பதப்படுத்தும் சிறு / குறு நிறுவனங்களுக்கான திட்டம் 2020-2021-ம் ஆண்டு முதல் 2024-2025-ம் ஆண்டு வரை 5 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டம் மத்திய அரசின் 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் 40 சதவீதம் நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏற்கனவே உணவுப் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு நிறுவனங்களை வலுப்படுத்துதல் அல்லது புதிய நிறுவனங்கள் தொடங்குதல், குழு அடிப்படையில் பொது உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி தருதல், வர்த்தக முத்திரை மற்றும் சந்தைப்படுத்துதல் தொழில்நுட்ப பயிற்சிகள் போன்ற இனங்களுக்கு நிதி உதவி வழங்கப்படும்.

மேலும் தனி நபர், உணவு பதப்படுத்தும் தொழிலில் புதிதாக ஈடுபடும் சிறு / குறு தொழில் நிறுவனங்கள், சுய உதவி குழுக்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் போன்றவைகளுக்கும் நிதி உதவி வழங்கப்படும். ஒரு மாவட்டத்திற்கு ஒரு விளை பொருள் என்ற அடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு மீன் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபட உள்ள தனி நபர் திட்டத்தில் மொத்தம் 42 எண்கள் இலக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற விருப்பம் உள்ள தனிநபர்கள் குறைந்த பட்சம் 8-ம் வகுப்பு தேர்ச்சி பெற்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு நபர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

இத்திட்டத்தின் மூலம் உணவு பதப்படுத்தும் தொழிலில் புதிதாக ஈடுபடும் சிறு / குறு தொழில் நிறுவனங்கள் தகுதியான திட்ட மதிப்பீட்டில் 35 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை மானியம் பெற்று பயனடைய வழிவகை உள்ளது. வர்த்தக முத்திரை மற்றும்

சந்தைப்படுத்துதலுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். மேலும் உணவு பதப்படுத்தும் தொழிலில் புதிதாக ஈடுபடும் சிறு / குறு தொழில் நிறுவனங்களுக்கு வங்கி மூலம் தொழில் கடன் பெறுவதற்கு மாவட்ட தொழில் மையம் (DIC) மூலம் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கப்படும்.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவர்கள் ஆதார் அட்டை, பான்கார்டு, மாற்று சான்றிதழ், சாதிச் சான்றிதழ் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம், விலைப்புள்ளி, வாடகை ஒப்பந்தம், நில பத்திரம், மின் கட்டண ரசீது திட்ட அறிக்கை ஆகியவற்றுடன் அந்நதந்த வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் வேதாரண்யம்-கந்தசாமி-(6369149527), கீழையூர்-செல்வம்-(9688105753), நாகப்பட்டினம்-வேதரத்தினம்-(9842447845), தலைஞாயிறு-மாரிமுத்து-(9585518068), கீழ்வேளுர்-பன்னீர்செல்வம் (9003715944), திருமருகல்- விக்டோரியா-(7639683876) ஆகியோரையும், கூடுதல் விவரங்களுக்கு வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) மயிலாடுதுறை திருமதி.ப.கிருத்திகா-(9443940780) ஆகியோரை அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விபரங்களை அறிந்து விண்ணப்பிக்கலாம் என வேளாண்மை துணை இயக்குநர் திரு.ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**